بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

February 21 2014

**தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்**

# முஸ்லிஹ் மவ்வூது - வாக்களிக்கப்பட்ட மகன்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

நேற்று பிப்ரவரி 20ம் தேதியாகும். இந்த நாள், ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் என்ற பெயரில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், தனது ஒரு மகன் பிறப்பது தொடர்பாகக் கூறி இருந்தார்கள். அவர், நல்ல, ஸாலிஹான மற்றும் பல்வேறு பண்புகளைக் கொண்டவராக இருப்பார் எனக் கூறி இருந்தார்கள். கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்கள் தொடர்பான விஷயங்களை எடுத்துரைத்தேன்.

இன்று, அதாவது பிப்ரவரி 20ம் தேதியை ஒட்டியுள்ள ஜுமுஆவாக இருப்பதால் இந்த முன்னறிவிப்பைப் பற்றி எடுத்துரைப்பது சரியாக இருக்கும் எனக் கருதினேன். இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாபெரும் அடையாளமாகக் கூறி இருந்தார்கள். ஆட்சேபனையாளர்களுக்குரிய பதிலில் அன்னார் இவ்வாறு தெளிவுபடுத்தினார்கள். அதாவது நீங்கள் ஆட்சேபனைகளைக் கூறவே செய்கின்றீர்கள். ஆனால் இது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். அதாவது, இதில் மகன் பிறப்பது தொடர்பாக மட்டும் முன்னறிவிப்பு செய்யப்படவில்லை. மாறாக, நீண்ட ஆயுள் பெறக்கூடிய அன்னாரது வாழ்வில் பிறக்கக்கூடிய, இந்த பண்புகளைக் கொண்ட மகன் பிறப்பதைக் குறித்து முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இந்த அறிவிப்பை ஆழமான மற்றும் நீதியின் பார்வையில் பார்த்தோம் என்றால், இது இறை அடையாளமாக இருப்பதில் எவ்வித சந்தேகமும் ஏற்படாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஆட்சேபனையாளர்களிடம் கூறினார்கள்: உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்கும் என்றால், இதனைப் போன்ற அடையாளங்களைக் கொண்ட முன்னறிவிப்புகளை வெளியிடுங்கள் என்று கூறினார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இவ்விடத்தில், கண்களைத் திறந்து பார்க்க வேண்டும். அதாவது இது வெறும் முன்னறிவிப்பு மட்டுமல்ல. மாறாக, இது மகத்தான இறை அடையாளமாகும்.

அன்னாரின் வருகையின் நோக்கமாகிய இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகத்துவத்தை மற்றவர்கள் மீது நிரூபிப்பது என்பதை இவ்விடத்திலும், இந்த முன்னறிவிப்புகளை, அடையாளங்களை எடுத்துரைத்தவாறு எனது உண்மைத்துவத்தை நிரூபிக்கிறது எனக் கூறவில்லை. மாறாக, இந்த விண்ணின் அடையாளங்களை கருணைமிக்க இறைவன், நமது நபியே கரீம், ரவூஃபுர் ரஹீம் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய உண்மை மற்றும் கண்ணியத்தை நிரூபிப்பதற்காக வெளியிட்டுள்ளான் எனக் கூறுகின்றார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

உண்மையில், இந்த அடையாளங்கள் இறந்தவரை உயிர்ப்பிக்கச் செய்வதை விட 100 மடங்கு உயர்வானதும், மேலானதும், முழுமையானதும் ஆகும்.

அன்னார் இதற்கு விளக்கம் கூறுகின்றார்கள்: இறந்தவரை உயிர்ப்பிக்கச் செய்வது என்பது, ஒரு ரூஹை சிறிது காலத்திற்காக திரும்ப அழைத்துக் கொள்வதாகும். இது பைபிளில் ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் சில நபிமார்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது போன்றதாகும். இதிலும் ஆட்சேபனை செய்பவர்களுடைய ஆட்சேபனைகள் இருக்கின்றன. இறந்தவரை உயிர்ப்பிப்பதை ஏற்றுக் கொண்டாலும் இதன் மூலமாக உலகிற்கு எவ்வித பயனும் ஏற்படாது. ஆனால் இங்கு இறை அருளால், அவனது கருணையினால் அவனது பரக்கத்தினால் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மீது இறைவன் இந்த எளியவனுடைய துஆவை ஏற்றுக் கொண்டவாறு எப்படிப்பட்ட அருளுக்குரிய ரூஹை அனுப்புவதாக வாக்குறுதி அளித்துள்ளான் என்றால், அவரது உட்புற, வெளிப்புற அருள்கள் உலகம் முழுவதும் பரவும்.

### *ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:*

மக்களே! நான் யார்? எனது உண்மை நிலை என்ன? எவர் என் மீது தாக்குதல் நடத்த விரும்புகின்றாரோ அவர் உண்மையில் எனது பரிசுத்த வழிகாட்டி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்த விரும்புபவர் ஆவார். எனவே, அவர் நினைவில் கொள்ள வேண்டும். அவரால் சூரியன் மீது மண்ணைப் போட முடியாது. மாறாக, அந்த மண்ணே அவரது தலையிலும், கண்களிலும், அவரது முகத்திலும் விழுந்து அவரை இழிவுபடுத்தும். நமது நபி (ஸல்) அவர்களுடைய மேன்மையும், மகிமையும், அவரது பகைமை மற்றும் பொறாமையினால் குறைந்து விடாது. மாறாக, இறைவன் அதிக அளவு அதனை வெளிப்படுத்துவான். உங்களால் ஃபஜ்ர் நேரத்தில் உதயமாகும் சூரியனை தடுக்க முடியுமா? இதனைப் போன்று தான் உங்களாலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைக்கு எவ்வித இழப்பையும் ஏற்படுத்த முடியாது. இறைவன் உங்களுடைய பொறாமை, கருமித்தனம் போன்றவற்றை அகற்றுவானாக! இந்த ஆட்சேபனை செய்பவர்களில் முஸ்லிம் அல்லாதவர்களுடன் சில முஸ்லிம்களும் இணைந்திருந்தனர். அன்னார் அவர்களுக்கு இவ்வாறு சவால் விட்டும், எச்சரிக்கையும் செய்துள்ளார்கள்.

எவ்வாறிருப்பினும், நாம் ஏற்கனவே அறிந்துள்ளதைப் போன்று இந்த முன்னறிவிப்பிற்கேற்ப 1889 மார்ச் –ல் அந்த வாக்களிக்கப்பட்ட மகன் பிறந்தார். அவர்கள் இஸ்லாத்தின் மேன்மை, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகத்துவத்தையும், கண்ணியத்தையும் நிலைபெறச் செய்வதற்காக எப்படிப்பட்ட சாதனைகளைச் செய்துள்ளார்கள் என்றால், உலகம் நிலைபெற்றிருக்கும் வரை அது நினைவு கூறப்படும். இதனை மற்றவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுடைய சில சாதனைகளை எடுத்துரைப்பதற்கு முன்பு முன்னறிவிப்பின் அசல் வார்த்தைகளை எடுத்துரைப்பதை முக்கியமானதாகக் கருதுகின்றேன். இது மீண்டும் மீண்டும் நம்முன் வருவதன் மூலம் இதன் மகத்துவம், உண்மைத்துவம் தெரிய வர வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பிப்ரவரி 20ம் தேதி 1886 ஆம் ஆண்டு ஒரு பிரசுரம், நிஸாலா ஸிராஜ்ஜே முனீர், முஷ்தமில் பர் நிஷான் ஹாயே ரப்பே கதீர் என்ற பெயரில் வெளியிட்டார்கள். இதனை அமிர்தசரஸைச் சேர்ந்த ரியாஸே ஹிந்த் என்ற பத்திரிகை மார்ச் 1 ஆம் தேதி 1886 ஆம் ஆண்டு பிற்சேர்க்கை இணைப்பாக வெளியிடப்பட்டது.

### *அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எழுதினார்கள்:*

இந்தப் பத்திரிகையில் அனைத்து முன்னறிவிப்புகளும் விளக்கத்துடன் வெளியிடப்படும். முதல் முன்னறிவிப்பு இந்த எளியவனுடன் தொடர்பானதாகும். இன்று பிப்ரவரி 20ம் தேதி 1886 ஆம் ஆண்டு ஜமாதில் அவ்வல் 15–ல் சுருக்கமான கருத்தைக் கூறியவாறு இறைவனுடைய வார்த்தைகள் உதாரணமாக எழுதப்படுகின்றன. பிரசுரத்தில் தெளிவாக எழுதப்படும். இன்ஷா அல்லாஹ் கருணையுள்ள கண்ணியமிக்க இறைவனிடமிருந்து பெற்ற இல்ஹாமில் உள்ள முதல் முன்னறிவிப்பு இதுவாகும்.

கண்ணியமிக்க வல்லமையுள்ள இறைவன் இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான். நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஓர் கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உனது துஆக்களுக்கு என்து ரஹ்மத்தினால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை வழங்கினேன். ஹோஷியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கெண்ட உமது பயணத்தை உனக்கு அருளுக்குரியதாக ஆக்கி விட்டேன். ஆகவே உனக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகிறது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. மேலும் வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம்மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக! இறைவன் இதை கூறினான். இதன் மூலம் வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மார்க்கத்தின்

சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்படவேண்டும். அதன் மூலம் உண்மை அதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும் பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடி விட வேண்டும். மேலும் அதன் மூலம் நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகின்றேனோ அதனை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைவனின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் போன்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு திறந்த அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் திட்டமும் வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஒரு அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்து தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார். அல்லாஹ் இங்கு எல்லா விதமான சந்தேகங்களையும் களைந்து விட்டான். பின்னர் வரக்கூடிய சந்ததிகளில் அவர் பிறக்கமாட்டார். மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகனாக இருப்பார் எனக் கூறுகிறான்.

அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அஞ்சாமே ஆத்தமில் அரபியில் எழுதப்பட்டுள்ள முழு முன்னறிவிப்பில் அன்முவாயில் என எழுதப்பட்டுள்ளது. அவருக்கு புனித ஆன்மா வழங்கப்பட்டுள்ளது. அவர் அகத்திலிருந்தும் தூய்மை அடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் இருக்கின்றது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவமிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார். அவர் உலகத்திற்கு வருவார். தனது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனென்றால் இறைவனின் கருணையும் அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திகூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகளால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். திங்கட்கிழமை, அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது பாசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவரிடமிருந்தே முதலும் இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்தே உண்மையும் உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்தது போன்று அது இருக்கும். அவரது வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் நமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் மிக விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வகான அம்ரன் மக்ஸிய்யா – இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.

ஆக, நான் கூறியது போன்று இப்படிப்பட்ட சிறப்பம்சங்களைக் கொண்டவாறு தான் அந்த புதல்வன் பிறக்க வேண்டியிருந்தது. அந்த மகன் பிறந்ததை உலகம் பார்த்தது. மேலும் 52 வருடம் கிலாஃபத் பதவியில் இருந்த பிறகு தனது சிறப்பம்சங்களை உலகம் ஏற்றுக் கொள்ளும்படி செய்து இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றார்கள்.

இந்த சிறப்பம்சங்களின் ஆழத்தை சற்று உற்று நோக்கியவாறு, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ், அல் முஸ்லிஹ் மவ்வூது உடைய வாழ்க்கையைப் பார்த்தோம் என்றால், இதனை எழுதுவதற்கு பல நூற்கள் தேவைப்படும். ஏதாவது ஒரு குத்பாவில் அல்லது ஏதாவது ஒரு சொற்பொழிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு அன்னாருடைய சாதனைகள் போன்றவற்றை எடுத்துக் கூறி விட முடியாது.

ஜமாஅத்தில் இது தொடர்பாக ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 20ம் தேதி கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. சொற்பொழிவாளர்கள், ஆலிம்கள் தனது அறிவு மற்றும் ஆர்வத்திற்கேற்ப இந்த விஷயங்களை எடுத்துரைக்கின்றனர். நானும் பலமுறை இந்த விஷயங்களை எடுத்துக் கூறியுள்ளேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹும் இதனை எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால் நமக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வாழ்க்கை மற்றும் இந்த முன்னறிவிப்பைப் பற்றி முழுமையாகத் தெரிந்து விட்டது என்றோ அல்லது எல்லாருக்கும் புரிந்து விட்டது என்றோ நாம் கூறி விட முடியாது.

எவ்வாறிருப்பினும், இன்றும் இந்த முன்னறிவிப்பு தொடர்பாக சில விஷயங்களை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து எடுத்துரைப்பேன். அந்த ஒன்றிரண்டும் முழு முன்னறிவிப்பு தொடர்பானவை அல்ல. மாறாக, முன்னறிவிப்பில் கூறப்பட்ட ஒன்றிரண்டு பகுதிகளைப் பற்றி எடுத்துரைப்பேன். அது நம்மவர்களையும் மற்றவர்களையும் அன்னாரின் அறிவு மற்றும் ஞானம் எவ்வாறு தாக்கத்திற்கு ஆளாக்கியுள்ளது என்பதைப் பாருங்கள். அதற்கு முன், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய நூல்கள், உரைகள், சொற்பொழிவுகள் குறித்த ஒரு ஆய்வையும் கூற விரும்புகின்றேன். அப்போது பதிவு செய்வதற்கு முறையான எந்த ஏற்பாடும் இருந்ததில்லை. சில உரைகள், சொற்பொழிவுகள் முழுமையாக இருக்கின்றன. சில முழுமையாக இல்லை. சில சமயங்களில் உடனுக்குடன் எழுதப்பட்டு வந்தது. அவையும் முழுவதுமாக எழுத முடியாமல் இருந்தது.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய நூல்கள், உரைகள் மற்றும் சொற்பொழிவுகள் போன்றவற்றின் தொகுப்பை அன்வாருல் உலூம் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன் வெளியிடுகின்றது. தற்போது வரை அன்வாருல் உலூமின் 24 பாகங்கள் வெளி வந்துள்ளன. இந்த பாகங்களில் அன்னாரது மொத்தம் 633 சொற்பொழிவுகள், உரைகள் மற்றும் நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் திட்டத்தின் படி இது 32 பாகங்கள் வரை இருக்கும். இந்த வகையில் மொத்தமாக உரைகள், சொற்பொழிவுகள், நூல்கள் போன்றவை 650 வரை இருக்கும். தற்போது 25 முதல் 29 வரையுள்ள பாகங்கள் தயாராகி விட்டன. அவைகள் அச்சிடப்படவில்லை. நான் கூறியது போன்று ஏற்கனவே 24 பாகங்கள் வரை வெளிவந்து விட்டது. இந்தப் பாகங்களில் 163 சொற்பொழிவுகள் மற்றும் நூல்கள் அடங்கியுள்ளன. இதன் பின்னர் மூன்று பாகம் மட்டும் தான் எஞ்சியிருக்கும். ஏறக்குறைய அவை 800 பக்கங்களுக்கு மேல் சென்று விடும்.

இதைப் போன்று, ஜுமுஆ குத்பாக்கள், பெருநாள் குத்பாக்கள், நிக்காஹ் போன்றவைகளைப் பற்றி கிடைத்துள்ள பட்டியலின்படி இதன் எண்ணிக்கை 2076 ஆகும். தற்போது வரை குத்பாத்தே மஹ்மூதின் 28 பாகங்கள் வரை வெளிவந்து விட்டது. அவற்றில் 1602 குத்பாக்கள் இருக்கின்றன. 1948 முதல் 1959 வரையுள்ள குத்பாக்கள் 29 முதல் 39வது பாகங்கள் வரை வெளியாகும். இதன் மூலம் ஏறக்குறைய 500 குத்பாக்கள் எண்ணிக்கையில் இணைந்து விடும்.

ஆக, இது அன்னாரது அறிவு சார்ந்த ஒரு சிறிய வரைபடம் ஆகும். ஒருவேளை அன்னாரது அனைத்து உரைகளையும் சொற்பொழிவுகளையும் கேட்டோம்; எழுதினோம் என்றால், அதில், அறிவு மற்றும் ஞானத்தின் முத்துக்கள் சேர்க்கப்பட்டிருப்பது தென்படுவதோடு, அறிவின் ஊற்று வெளிப்படுவதைக் கண்டு மனிதன் வியப்படைந்து விடுவான். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் ஒருமுறை இந்தக் கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஒரு சிறப்பை எடுத்தோம் என்றால், அதாவது அவர் உட்புற, வெளிப்புற அறிவினால் நிரப்பப்படுவார் என்பதை எடுத்துப் பார்த்தோம் என்றால், இது எந்த அளவு நீண்டது என்றால் இதைப் பற்றி எடுத்துரைத்துக் கொண்டே சென்றாலும் அது முடிவடையாது.

***இது சம்பந்தமாக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறினார்கள்:***

இதைப் பற்றி பார்க்கும் போது, ஹுஸூருடைய ஒரு நூல், தஃப்ஸீரே கபீர் உள்ளது. அது எந்த அளவு வியப்பான தஃப்ஸீர் என்றால், எவர் ஒருவர் அதன் ஒரு பகுதியைக் கவனத்துடன் படிப்பாரோ, அவர் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாவார். அதாவது உலகில் இறைவனுடைய அடியானாக ஒருவர் தோன்றினால், அவர் திருக்குர்ஆனில் இந்தப் பகுதியை தஃப்ஸீருடன் வெளியிட்டிருந்தால், பிறகு அவர் உலகின் பார்வையில் கண்ணியமிக்க மனிதர்களில் ஒரு மனிதனாக ஆவதற்கு அதுவே போதுமானதாகும். ஆனால் இதனுடன் நின்று விடவில்லை. திருக்குர்ஆன் தொடர்பாக மேலும் பல நூல்களை எழுதியுள்ளார்கள்.

*ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:*

எனது எண்ணத்தின்படி ஹுஸூர் அவர்கள் 10 ஆயிரம் பக்கங்கள் வரை எழுதியிருப்பார்கள். தற்போது அச்சிடப்பட்ட நிலையில் இருக்கும் தஃப்ஸீரே கபீர் ஏறக்குறைய 6000 பக்கங்களைக் கொண்டதாகும். அதைத் தவிர சூராக்களின் பிரசுரங்கள், பல்வேறு உரைகளில் திருக்குர்ஆன் தொடர்பாக பேசப்பட்டிருக்கின்றது. அவைகள் இவற்றில் சேர்க்கப்படவில்லை.

அடுத்து அன்னாரது எழுத்துக்களும் இருக்கின்றன.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 10 நூல்களை எழுதியிருக்கிறார்கள். இது மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய அப்போதைய ஆய்விற்கேற்ப கூறப்பட்டதாகும். தஃப்ஸீரே கபீர் உடைய 10 பாகங்களில் சூரா ஃபாத்திஹா, சூரா அல்பக்கராவின் முதல் இரண்டு அதிகாரங்கள், பிறகு யூனுஸ் அதிகாரத்திலிருந்து அன்கபூத் அதிகாரம் வரை. 10 வது அதிகாரம் முதல் 29வது அதிகாரம் வரை. பிறகு இடையில் எழுதப்படவில்லை. பிறகு அந்நபா அதிகாரம் முதல் அந்நாஸ் அதிகாரம் வரை. ஏறக்குறைய 59 அதிகாரங்களுக்கு தஃப்ஸீர் எழுதப்பட்டுள்ளது. இந்த தஃப்ஸீர்கள் ஏறக்குறைய 6000 பக்கங்களைக் கொண்டதாகும். மிகவும் சிறியதாக எழுதப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில் எழுதுவது போன்று எழுதினால் 10 ஆயிரம், 12 ஆயிரம் பக்கங்கள் வரை அவை சென்று விடும். அவை மீண்டும் அச்சிடப்படுகின்றது. இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் வெளிவந்து விடும்.

திருக்குர்ஆனில் மொத்தம் 114 அதிகாரங்கள் உள்ளன. அதன்படி 55 அதிகாரங்கள் இவற்றில் இணையவில்லை. பிறகு எழுத்துக்களில் 10 நூல்களை அன்னார் எழுதியுள்ளார்கள். ஆன்மீகம், இஸ்லாமிய ஒழுக்கம், இஸ்லாத்தின் கொள்கைகள் தொடர்பாக அன்னார் 31 நூல்களை எழுதியுள்ளார்கள். வாழ்க்கை வரலாற்றில் 13 நூல்களை அன்னார் எழுதியுள்ளார்கள். வரலாற்றில் 4 நூல்களை எழுதியுள்ளார்கள். ஃபிக்கா (மார்க்கச் சட்டத்தில்) 3 நூல்களை எழுதியுள்ளார்கள். இந்தியா பிரிவினைக்கு முன்பிருந்த அரசியலில் 25 நூல்களையும், இந்தியா பிரிவினைக்கு முன்பு முதல் பாகிஸ்தான் நிலைபெறுவது வரையுள்ள அரசியலில் 9 நூல்களை எழுதியுள்ளார்கள். காஷ்மீரின் அரசியலில் 15 நூல்களை எழுதியுள்ளார்கள். பிறகு அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் முக்கியமான விஷயங்கள் மற்றும் திட்டங்களில் ஏறக்குறைய 100 நூல்களை எழுதியுள்ளார்கள். இதைத் தவிர எண்ணிலடங்கா பிற தலைப்புகளில் எழுதியுள்ளார்கள். நான் கூறியது இது ஏறக்குறைய 800க்கும் அதிகமாக இருக்கும்.

***ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அவர் வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகளால் நிரப்பப்படுவார் எனக் கூறப்பட்டதற்கேற்ப, இதன்பால் ஒரு கணம் பார்வையைச் செலுத்தினால் அன்னாரிடம் வெளிப்புறமான அறிவுகளும் தென்படும். உட்புறமான அறிவுகளும் தென்படும். மேலும் ஒரு சுவையான விஷயம் என்னவென்றால், எப்போதெல்லாம் அன்னார் நூலை எழுதுவார்களோ இதனை விட சிறப்பாக யாராலும் எழுத முடியாது என ஒவ்வொருவரும் கூறவர். அன்னார்அரசியலில் தலைமையேற்ற போதெல்லாம் அல்லது அரசியலுக்குரிய சட்டத்திற்கு எப்போதெல்லாம் அன்னார் வழிகாட்டினார்களோ பெரிய பெரிய பகைவர்களும் கூட அன்னாருடைய நிகரற்ற தகுதியினை ஏற்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள்.

ஆக, ஹுஸூர் அவர்களுடைய உட்புற, வெளிப்புற அறிவினால் நிரப்பப்படுவார் என்பதில் மிகப்பெரிய விளக்கம் ஒன்று உள்ளது. அதன் ஆயிரத்தில் ஒரு மடங்கு கூட நம்மால் பெற முடியாது. மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறியது போன்று தஃப்ஸீரே கபீர் ஒன்றே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தரத்தை ஒப்புக் கொள்ளச் செய்வதற்குப் போதுமானதாகும். நிச்சயமாக இந்த தஃப்ஸீர்கள் திருக்குர்ஆனை புரிவதற்கு ஒரு புதிய கோணம், அறிவு மற்றும் ஞானத்தின் ஆழிய இரகசியத்தைத் திறந்திருக்கின்றன. அவை எப்போதும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய பங்காகவே இருக்கும்.

தற்போது நான், அன்னாருடைய தஃப்ஸீர் மீது மற்றவர்களின் சில விமர்சனங்களை எடுத்துரைக்கின்றேன்.

***அல்லாமா நியாஸ் ஃபத்ஹ்பூரி சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு தனது ஒரு கடிதத்தில் எழுதுகின்றார்கள்:***

தஃப்ஸீரே கபீரின் மூன்றாம் பாகம் இன்று என் முன்னால் இருக்கின்றது. (இவர் அஹ்மதி அல்லாதவர்). நான் அதனை மிகவும் கவனத்துடன் பார்க்கின்றேன். இதில் தாங்கள் திருக்குர்ஆன் ஓதுவதைப் பற்றிய புதியதொரு சிந்திக்கும் கோணத்தை ஏற்படுத்தியிருக்கின்றீர்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த தஃப்ஸீர், தனது வகையில் ஒரு புதிய தஃப்ஸீர் ஆகும். இதில் அறிவையும், ஆதாரங்களையும், மிகவும் அழகுடன் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உங்களுடைய அறிவாற்றல், உங்களுடைய தொலைநோக்குப் பார்வை, உங்களுடைய அசாதாரணமான சிந்திக்கும் திறன், உங்களுடைய அழகிய விளக்கங்கள் போன்றவை ஒவ்வொரு எழுத்திலிருந்தும் வெளிப்படுகின்றன. மேலும் நான் தற்போது வரை இதைப் பற்றி அறியாமல் இருந்ததைக் குறித்து வருந்துகிறேன். நான் அனைத்துப் பாகங்களையும் பார்த்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

நேற்று அதிகாரம் ஹூது –ன் தஃப்ஸீரில் ஹஸ்ரத் லூத் பற்றிய உங்களது சிந்தனையைப் படித்து எனது உள்ளம் எழுச்சி பெற்றது. மேலும் என்னை தடுக்க முடியாமல் இதனை எழுதுகிறேன். அதாவது தாங்கள் ஹாவுலாயி பனாத்தி உடைய தஃப்ஸீர் எழுதியவாறு ஏனைய விரிவுரையாளர்களை விட தனியான கருத்தை எழுதுவதற்கு

எடுத்துக் கொண்ட கோணத்திற்கு உங்களைப் பாராட்டாமலிருப்பது என்னால் முடியாததாகும். இறைவன் தங்களுக்கு நீண்ட நாள் ஆரோக்கியத்தை வழங்குவானாக! இவ்வாறு அவர் அப்போது துஆசெய்துள்ளார்.

***பிறகு அல்லாமா நியாஸ் ஃபத்ஹ்பூரி சாஹிப் அவர்கள் மற்றொரு கடிதத்தில் எழுதுகிறார்கள்:***

தஃப்ஸீரே கபீரைத் தொடர்ந்து படித்து வருகின்றேன். இரவில் விடாமல் தொடர்ந்து அதனைப் படித்து வருகின்றேன். அதனை நான் எவ்வாறு பெற்றேன்? என்பதற்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. ஆனால் சுருக்கமாக, இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள். அதாவது இது எனது பார்வையில், மனிதனுடைய சிந்தனையில் பெரிய அளவில் திருப்தி அளிக்கக்கூடிய உருதுவில் எழுதப்பட்ட முதல் தஃப்ஸீர் ஆகும். இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. அதாவது இந்த தஃப்ஸீர் மூலமாக உங்களது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிய தொண்டுகள் எந்த அளவு உயர்வானது என்றால், அதனை உங்களது பகைவர்களால் கூட மறுக்க முடியாது.

***பாட்னா பல்கலைக்கழகத்தின் உருது பிரிவின் தலைவர் நவாப் அக்தர் அலி* M.E., M.S. *சாஹிப்*** அவர்கள், பாட்னாவிலுள்ள கல்லூரியின் ஃபார்ஸி பிரிவின் முன்னாள் தலைவரும், பாட்னாவிலுள்ள ஷக்கீனா கல்லூரியின் ஃபார்ஸி பிரிவின் இந்நாள் தலைவருமான **புரொஃபொஸர் அப்துல் மன்னான் பேதில் சாஹிப்** அவர்களுடன் தஃப்ஸீர் தொடர்பான தான் கண்ணில் கண்ட காட்சிக்கு சாட்சியம் அளிக்கிறார்கள். அவர் கூறுகின்றார்:

நான் ஒன்றன்பின் ஒன்றாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய தஃப்ஸீரின் ஒரு சில பாகங்களை புரொபொஸர் அப்துல் மன்னான் பேதில் சாஹிப் அவர்களிடம் கொடுத்தேன். அவர் இந்த தஃப்ஸீரை படித்து எந்த அளவு தாக்கத்திற்கு ஆளானார் என்றால், அவர் பாட்னாவிலுள்ள அரபி மத்ரஸா ஷம்ஷுல் ஹுதா உடைய ஷேக்குகளுக்கு தஃப்ஸீர் உடைய சில பாகங்களைப் படிக்கக் கொடுத்தார்.

ஒருநாள் பல ஷேக்குகளை அழைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டார். அதற்கு ஒரு ஷேக் ஃபார்ஸியில் இப்படிப்பட்ட தஃப்ஸீர் இல்லை எனக் கூறினார். புரொஃபொஸர் அப்துல் மன்னான் சாஹிப் அவர்கள் அரபி தஃப்ஸீர்கள் தொடர்பாக நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்? எனக் கேட்டார். அதற்கு ஷேக்குகள் அமைதியாக இருந்தார்கள். சிறிது நேரம் கழித்து அவர்களில் ஒருவர் பாட்னாவில் அரபியின் அனைத்து தஃப்ஸீர்களும் கிடைப்பதில்லை. எகிப்து மற்றும் சிரியாவின் அனைத்து தஃப்ஸீர்களையும் படித்த பின்னரே சரியான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியும் என்றார். அதற்கு புரொஃபொஸர் சாஹிப் அவர்கள் பழைய அரபி தஃப்ஸீர்கள் பற்றி எடுத்துரைத்தவாறு, மிர்ஸா மஹ்மூது உடைய தஃப்ஸீரைப் போன்று எந்த மொழியிலும் தஃப்ஸீர் இல்லை எனக் கூறினார். நீங்கள் எகிப்திலிருந்தும், சிரியாவிலிருந்தும் புதிய தஃப்ஸீர்களை வரவழையுங்கள். சில மாதங்கள் கழிந்த பிறகு என்னிடம் வந்து பேசுங்கள் என்றார். அரபி மற்றும் ஃபார்ஸி உடைய ஆலிம்கள் வாயடைத்துப் போனார்கள்.

அடுத்து ***வழக்குறைஞர் ஸைய்யத் ஜாபர் ஹுஸைன் சாஹிப்*** அவர்கள் ஒரு சிறிய கடிதத்திற்குப் பிறகு ஒரு நீண்ட கட்டுரையை ஸித்கே ஜதீது பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். அதில் அவர் ஸித்கே ஜதீதின் ஆசிரியருக்கு எழுதுகிறார்:

தாருஸ் ஸலாமை பெறுவது தொடர்பான முயற்சியில் நான் சிறைச்சாலை அனுப்பப்பட்ட பிறகு மூன்றாவது நாள், நான் கைது செய்யப்பட்டதற்கான காரணம் குறித்து எனக்கு எழுத்து மூலம் தரப்பட்டது. அதில் என்னுடைய கடந்த மூன்று, நான்கு ஆண்டுகால உரையின் மேற்கோள்கள் இருந்தன. மேலும் நான் இந்தியாவின் அரசாங்கத்தை மாற்றி விட்டு இஸ்லாமிய அரசை நிலைநாட்ட விரும்புகிறேன் என்பது என் மீது சுமத்தப்பட்ட குற்றமாகும். என்னைப் போன்று ஒரு சிறிய நபர் மீது மலை போன்ற குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது என நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் எனக்கு சிறிது சிறிதாக எனது உரைகளிலிருந்து இப்படிப்பட்ட கருத்தும் எடுக்கலாம் எனப் புரிய வந்தது. நான் உங்களிடம் எடுத்துக் கூறினேன். நான் ஒரு வழிதவறிய பயணி ஆவேன். செல்ல வேண்டிய இடம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் செல்வதற்கான வழிதான் தெரியாமல் இருக்கிறது. முஸ்லிம்களின் அஞ்சுமன் இத்திஹாத் முஸ்லிமீன் ஆக இருந்தாலும், வேறெதுவாக இருந்தாலும் சரி, அனைவரின் நிலைமையும் இதுதான்.

அவர் கூறுகின்றார்: நான் மறுநாள், சிறையில் எனது நண்பர் கொடுத்த தஃப்ஸீரே கபீரை படிக்க ஆரம்பித்தேன். இதனை அவரது நண்பர் தன்னுடன் எடுத்து வந்திருந்தார். எனக்கு இந்த தஃப்ஸீரில் வாழ்வுடன் இணைந்த இஸ்லாம் தென்பட்டது. இவர் அப்போது அமைதி ஆகவில்லை. அவர் கூறுகின்றார்: நான் தேடிய அனைத்தும் இதில் இருந்தது. தஃப்ஸீரே கபீர் படித்து முதன்முறையாக திருக்குர்ஆனைப் பற்றி அறிந்தேன். நீங்கள் கூறியது போன்று அதாவது ஆசிரியருக்கு எழுதுகிறார். தனது கொள்கையை விட்டு விட்டு அஹ்மதிய்யா போன்ற ஜமாஅத்தில் இணைவதை அனைத்து ஆலிம்களும் ஒரு பெரிய விஷயமாக ஆக்கி இருப்பது சாதாரண விஷயம்

ஒன்றுமல்ல. ஆனால் உண்மை வெளிப்பட்ட பிறகு இங்கு ஏற்படும் அபாயத்தைக் குறித்து யாரும் கவலைப்படுவதில்லை. எனவே நான் இரவு பகலாக ஸஜ்தாவில் விழுந்து துஆ செய்ய ஆரம்பித்தேன். அல்லாஹ்வே எனக்கு நேரான வழியைக் காட்டுவாயாக! என வேண்டினேன். பல மாதங்கள் இவ்வாறே கழிந்தன. எனது கண்ணீரால் நான் ஸஜ்தா செய்யும் இடம் ஈரமாகிக் கொண்டிருந்தது என்பதை உங்களிடம் கூறுகின்றேன். எனக்கு என்னுடைய துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது என உறுதி ஏற்பட்டது. ஏனென்றால் நான் அஹ்மதிய்யத்தை உண்மை எனக் கருதுவதில் உறுதியாகி விட்டேன். காதியானுக்கு மிர்ஸா வஸீம் அஹ்மது சாஹிபிடம் கடிதம் மூலமாக நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என விண்ணப்பம் தெரிவித்தேன்.

மேலும் அவர் கூறுகின்றார்: எனது சிறைக் காலத்தின் நீண்ட நாட்கள் சிக்கந்தராபாத்தில் கழிந்தது. அங்கிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒரு முஸ்லிமாகவும் அறிவு படைத்தவராகவும் இருந்தார். கைதிகளின் எல்லா விதமான கடிதப் போக்குவரத்தும் அவருடைய பார்வையின் கீழ் தான் இருக்கும். அவருடைய கையொப்பத்துடன் தான் கடிதங்களை அனுப்பவும், பெறவும் முடியும். இந்த விஷயம் எனக்கு சரியானதாக தென்படவில்லை. ஆனால் குறைவான தைரியத்தின் காரணமாக நான் காதியானுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி அதிகாரிகளுக்கு தெரியக் கூடாது என முயற்சி செய்து வந்தேன். மஜ்லிஸ் இத்திஹாதுல் முஸ்லிமீன் ஹைதராபாத் மிகவும் மென்மையான உள்ளம் கொண்ட ஜமாஅத் ஆகும். இது இந்தியாவிலுள்ள ஹைதராபாத் ஆகும். அந்த அமைப்பின் காரணமாக சிறைச்சாலையின் ஊழியர்கள், அதிகாரிகள், அனைத்து கைதிகளும் கூட என்னுடன் மிகவும் அன்புடனும், நெருங்கியும் பழகி வந்தனர். பாதுகாவலர்களைத் தவிர வேறு யாரும் என்னைச் சந்திக்க முடியாது. இந்த வகையில் எனது கடிதம், அதிகாரிகளுடைய பார்வையில் படாமலேயே காதியானுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் காதியானிலிருந்து வரக்கூடிய கடிதம் எவ்வாறிருப்பினும் சிறை அதிகாரி உடைய பார்வைக்குச் சென்ற பின் தான் வரும். காதியானிலிருந்து பைஅத்திற்கான படிவம் வந்த போது, சிறையில் மிகப்பெரிய பிரச்சனை ஏற்பட்டது. இரகசியத்தைப் பாதுகாக்க முடியவில்லை. கடைசியில் சிறை அதிகாரி என்னிடம் வந்தார். அவரிடம் பைஅத் படிவத்துடன் கூடிய எனது கடிதம் இருந்தது. அவர் மிகவும் அனுதாபத்துடன் பேசினார். நீங்கள் திருக்குர்ஆனின் இந்த தஃப்ஸீரை விட்டு விடுங்கள். நான் உங்களுக்கு மவ்லானா அபுல்கலாம் ஆஸாத் மற்றும் மவ்லானா மவ்தூதி சாஹிபுடைய திருக்குர்ஆன் தஃப்ஸீர்களைத் தருகின்றேன் என்றார். அந்த வகையில் அவர் அந்த இரண்டு தஃப்ஸீர்களையும் கொண்டு வந்தார். அது உண்மையில் தர்ஜுமாவாகத்தான் இருந்தது. ஒரு சில இடங்களில் மட்டும் தான் தஃப்ஸீர் இருந்தது.

நான் பைஅத் படிவத்தை நிரப்பி அனுப்புவதற்கு முன்பு, இந்த இரண்டு தஃப்ஸீர்களையும் படித்தேன். தஃப்ஸீர் கபீர் உடைய மாணவனுக்கு ஏனைய தஃப்ஸீர்களைப் பிரித்தறியக்கூடிய தகுதி ஏற்பட்டு விடும். எனவே நான் சிறை அதிகாரிகளிடம் கூறினேன். இந்த இரண்டு தஃப்ஸீர்களில் எந்தெந்த இடங்கள் சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றன. எங்கெல்லாம் மொழியாக்கத்தில் தவறுகள் இருக்கின்றன. எங்கெல்லாம் பொருள்களை சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது என்பதை என்னால் கூற முடியும். இவ்வாறு செய்வது எனக்கு எவ்வாறு எளிமையானது என்றால், தஃப்ஸீரே கபீரில் திருக்குர்ஆனின் அருள்சொற்பொருளும் உள்ளது. *லா யமஸ்ஸஹூ இல்லல் முத்தஹ்ஹரூன் – தூயவர்களால் மட்டும் தான் திருக்குர்ஆனின் பொருளைப் புரிய முடியும்.*

கூறுகின்றார்: நான் இந்த விளக்கத்தை ஏன் எழுதினேன் என்றால், நான் பைஅத் செய்வதில் காலதாமதம் செய்து விட்டேன் என்ற குற்றச்சாட்டு என்னிடமிருந்து விலக வேண்டும் என்பதற்காக நான் கூறுகின்றேன். நான் மற்றவர்களது தஃப்ஸீர்களையும் படித்தேன். பிறகு தஃப்ஸீரே கபீரைப் படித்தேன். ஒப்பீடு செய்து பார்த்தேன். பிறகு எனக்கு புரிந்து விட்டது.

தொடர்ந்து கூறுகின்றார்: நான் பைஅத் படிவத்தை அனுப்பி விட்டு, என்னுடைய பைஅத் ஏற்றுக் கொள்ளப்படுமா? இல்லையா? என துஆ செய்து கொண்டிருந்தேன். எனது எண்ணம் சரியாகி விட்டது. அதாவது எனது பைஅத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஓர் அஹ்மதி முஸ்லிம் மீது அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருப்பதும் கடமையாகும். சட்டங்களுக்குள் இருந்தவாறு பணியாற்ற வேண்டும். நான் ஹுஸூருக்குப் பதில் எழுதினேன். ஹுஸூர் உங்களுடைய இந்த அனைத்து விஷயங்களையும் உங்களது தஃப்ஸீர் எனது உள்ளத்தில் பதித்து விட்டது. சில நாட்களுக்குப் பிறகு காதியானிலிருந்து எனது பைஅத் ஏற்றுக் கொள்ளப்பட்டது எனத் தெரிய வந்தது. பிறகு நான் ஸஜ்தாவில் விழுந்து விட்டேன்.

அவர் கூறுகின்றார்: நான் தஃப்ஸீரே கபீரில் ஓரிடத்தில் முஸ்லிஹ் மவ்வூது ஆக இருக்கக்கூடிய கலீஃபா, கைதிகளின் விடுதலைக்குக் காரணமாவார் எனப் படித்தேன். பிறகு நான் ஹுஸூரிடம் எனது விடுதலைக்காக துஆ செய்யுங்கள் என விண்ணப்பம் செய்தேன். (அவர் அப்போது வரை சிறையில் தான் இருந்தார்.) ஹுஸூர்! கலீஃபா

அவர்கள் அல்லாஹ் உங்களது விடுதலைக்கு ஏற்பாடு செய்வானாக! என துஆ செய்தார்கள். இதன் ஒரு சில நாட்களுக்குப் பிறகு நான் விடுதலை ஆனேன். வாக்களிக்கப்பட்ட கலீஃபா பற்றிய இந்த முன்னறிவிப்பு அதாவது அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார் என்பதற்கு நான் உயிருள்ள ஒரு சாட்சியாவேன்.

அடுத்து மேற்கத்திய சிந்தனையாளர்கள் உள்ளனர். அவர்களில் அமெரிக்காவைச் சேர்ந்த, ஐரோப்பாவைச் சேர்ந்த பலர் உள்ளனர். தற்போது நான் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் எடுத்துரைக்கின்றேன். **A.J. Arbary –** இவர் இங்கிலாந்தின் சிந்தனையாளர் ஆவார். அரபி, ஃபார்ஸி, இஸ்லாமிய கல்வியின் ஸ்காலர் ஆவார்.

அவர் கூறுகின்றார்: திருக்குர்ஆனின் இந்த புதிய மொழியாக்கமும், தஃப்ஸீரும் மிகப்பெரிய சாதனையாகும். இவர் ஐந்து பாகங்களைப் பற்றி கூறுகின்றார். தற்போதுள்ள பாகங்கள் இந்த சாதனையின் முதல் படிகள் ஆகும். ஏறக்குறைய பதினைந்து ஆண்டு காலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆலிம்கள் இந்த மகத்தான பணியை ஆரம்பித்துள்ளனர். இந்தப் பணி ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது உடைய ஊக்கத்துடன் நடைபெற்று வந்தது. பணி மிகவும் உயர்வானதாகும். மேலும் திருக்குர்ஆனுடைய வார்த்தைகளுக்கு ஒரு பாகம் வெளியிட வேண்டும். அதனுடன் அதற்குரிய சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு இருக்க வேண்டும். மொழியாக்கத்துடன் ஒவ்வொரு வசனத்திற்கும் தஃப்ஸீரும் இருக்க வேண்டும். தற்போதுள்ள முதல் பாகம் திருக்குர்ஆனின் ஆரம்ப 9 அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கின்றது. ஆரம்பத்தில் மிர்ஸா பஷீருத்தீன் தாமே எழுதிய ஒரு நீண்ட முகவுரை இருக்கின்றது. அந்த முகவுரையில் ஹுஸூர் கூறுகின்றார்கள். இந்த தஃப்ஸீரில் எழுதப்பட்டுள்ள கருத்துகள் அனைத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் தனது நூல்கள் மற்றும் அறிவுரைகளில் எடுத்துரைத்த கருத்துக்களின் மொழிபெயர்ப்பு ஆகும். பிறகு அன்னாரது முதல் கலீஃபா அல்லது இரண்டாவது கலீஃபா அவர்கள் எடுத்துரைத்தவையாகும். எனவே இந்த தர்ஜுமா மற்றும் தஃப்ஸீரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் திருக்குர்ஆன் அறிவை சரியான முறையில் எடுத்துரைக்கக் கூடியதாகும் என நம்மால் கூற முடியும்.

இது மட்டுமல்ல. அரபிகளிலும் பலர் உள்ளனர். ***சிரியாவைச் சேர்ந்த டாக்டர் அனஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

உண்மை மற்றும் ஒளியைத் தேடியவாறு பல்வேறு ஆலிம்களின் நூல்களையும் தஃப்ஸீர்களையும் படித்தேன். அதில் சுல்தானுல் ஆரிஃபின் முஹைய்தீன் இப்னு அரபி, முஹம்மது பின் அலி அல் ஹாதமி, அத்தாயி போன்றோரின் தஃப்ஸீர்கள் அடங்கும். ஆனால் எந்தவொரு தஃப்ஸீரிலும் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது உடைய தஃப்ஸீரில் கிடைத்த அந்தவொரு ஈர்ப்பும், சுவையும் கிடைக்கவில்லை. நான் தனது ரூஹ் மற்றும் உயிருடன் காணக்கூடிய கஷ்ஃபுகள் ஆன்மீகக் காட்சிகளைப் பற்றிய விளக்கத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். பிறகு ஜமாஅத் உடைய இணையதளத்தில் உள்ள தஃப்ஸீரே கபீரைப் படித்த போது, அதில் அஹ்மதிய்யத்தின் ஒளி, உண்மை மற்றும் சத்தியம் தென்பட்டது. அது எனது உள்ளத்தைக் கவர்ந்து விட்டது.

***அடுத்து மராகிஸைச் சேர்ந்த ஜமால் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:***

நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடன் இவர்களது கடிதத் தொடர்பு இருந்து வந்தது. அவர் கூறுகின்றார்: கடிதத் தொடர்பு கொண்டிருந்த காலத்தில், தலைமையகத்திலிருந்து தஃப்ஸீரே கபீர் உடைய முதல் பாகம் எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. நான் அந்த தஃப்ஸீரைப் படித்தேன். பிறகு அதனை ஏனைய தஃப்ஸீர்களுடன் ஒப்பீடு செய்து பார்த்த போது, வானத்திற்கும் பூமிக்கும் இடையிலுள்ள வித்தியாசம் அதில் தென்பட்டது. இங்கு இறைவனுடைய அறிவு மற்றும் ஞானம் இருந்தது. ஷரீஅத்துடைய சாராம்சத்தின் சுருக்கம் இருந்தது. ஆனால் ஏனைய தஃப்ஸீர்களில் வெறும் மேலோட்டமான திருப்தி மட்டும் கொண்டிருப்பது தெரிய வந்தது. இந்த தஃப்ஸீரைப் படித்து எனது உள்ளத்தில் இஸ்லாத்தைப் பற்றி எப்படிப்பட்ட அழகிய படத்தைக் காண்பித்தது என்றால் அது எனது ரூஹ் வரை இறங்கிக் கொண்டே சென்றது.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது உடைய சொற்பொழிவு மற்றவர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம், அன்னாரது ஆழிய ஞானத்தை ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். அவற்றிற்கு ஒரு சில உதாரணங்களை எடுத்துரைக்கின்றேன்.

செய்யதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் பஞ்சாப் லிட்டரி லீக் உடைய விண்ணப்பத்திற்கேற்ப லாஹூரில் இரண்டு சொற்பொழிவு ஆற்ற சம்மதம் தெரிவித்தார்கள். இது பஞ்சாப் பல்கலைக் கழகத்துடன் தொடர்புடையதாகும். அதற்கேற்ப ஹுஸூருடைய முதல் சொற்பொழிவு உலக மொழிகளின் மத்தியில் அரபி மொழியின் மேன்மை, என்ற தலைப்பில் 1934 மே 31 ம் தேதியில் லாஹூரின் மால் ரோட்டிலுள்ள Y.M.C.A ஹாலில் நடைபெற்றது. இதற்கு ***ஜனாப் டாக்டர் பரக்கத் அலி சாஹிப் குறைஷி* M.A., Ph.d.,** இஸ்லாமிய கல்லூரியின் பிரின்ஸ்பல் தலைமை வகித்தார்கள். ஹுஸூருடைய சொற்பொழிவு ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது. அதனை

பார்வையாளர்கள் மிகவும் கவனத்துடன் கேட்டனர். இறுதியில் கூட்டத்தின் தலைவர் நன்றி செலுத்தியதன் பின்னர் வருகையாளர்கள் சொற்பொழிவிலிருந்து பயன்பெற வேண்டுமென கவனமூட்டினார். மேலும் இப்படிப்பட்ட அறிவுப்பூர்வமான சொற்பொழிவை மேலும் கேட்பதற்கு விருப்பம் தெரிவித்தார். பார்வையாளர்களில் அறிவு சார்ந்த அனைத்து மட்டத்திலிருந்த மக்களும் வருகை தந்திருந்தனர்.

ஜனாப் லாலா பீம்ஸின் சாஹிப் உடைய மகன் ***லாலா கமர் ஸீன் சாஹிப் முன்னாள்* Kashmir Chief Justice –**ம் அங்கு வருகை தந்திருந்தார். அவர் ஹுஸூருடைய சொற்பொழிவு மற்றும் அவை தலைவரது உரைக்குப் பின்னர், ஆங்கிலத்தில் ஒரு நன்றியுரை நிகழ்த்தினார்.

அவர் கூறுகின்றார்: இன்று கண்ணியத்திற்குரிய சொற்பொழிவாளர் அரபி மொழியின் மேன்மையைப் பற்றி உள்ளம் கவர்ந்த மற்றும் அறிவுப்பூர்வமாக ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நான் சொற்பொழிவைக் கேட்பதற்காக வந்த போது பழைய காலத்து மக்கள் எடுத்துரைக்கக்கூடிய அதே பாணியில் தான் இன்று சொற்பொழிவு ஆற்றப்படும் எனக் கருதினேன். அவர்கள் எவ்வாறு சொற்பொழிவாற்றுவார்கள் என்றால் பிரசித்தி பெற்ற ஒரு சம்பவம் உள்ளது. அதாவது ஒருமுறை ஒரு அரபியிடம் அரபி மொழியின் மேன்மை பற்றி வினவப்பட்டது. அதற்கு அவர் அரபி மொழிக்கு மூன்று காரணங்களினால் மேன்மை கிடைத்திருக்கிறது என்றார். முதல் காரணம், நான் அரபு நாட்டைச் சேர்ந்தவனாவேன். இரண்டாவது திருக்குர்ஆனின் மொழி அரபி ஆகும். மூன்றாவது சொர்க்கத்தில் அரபி பேசப்படும் என்பதனாலாகும் என்றார்.

அவர் கூறுகின்றார்: நான் இதுபோன்ற கருத்துகள் தான் அரபி மொழியின் மேன்மைக்காக இன்று எடுத்துரைக்கப்படும் எனக் கருதினேன். ஆனால் கொடுக்கப்பட்ட சொற்பொழிவு மிகவும் அறிவுப்பூர்வமான தத்துவங்களை தனக்குள் கொண்டிருந்தது. நான் ஜனாப் மிர்ஸா சாஹிபிற்கு நம்பிக்கையூட்டுகின்றேன். நான் அவர்களது சொற்பொழிவில் ஒவ்வொரு வார்த்தையையும் மிகவும் கவனத்துடனும் முழுமையாகக் கேட்டேன். இதிலிருந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். பல பயன்களையும் அடைந்தேன். இந்த சொற்பொழிவின் தாக்கம் நீண்ட காலம் எனது உள்ளத்தில் இருக்கும் என நம்புகின்றேன்.

அடுத்து, லாஹூர் இஸ்லாமியக் கல்லூரியின் ***உதவி பிரின்ஸ்பல் ஸெய்யது அப்துல் காதிர் சாஹிப் –*** இவர் வரலாற்றுப் பிரிவின் தலைவர் ஆவார். இவர் இஸ்லாமியக் கல்லூரியில் இஸ்லாம் மற்றும் கம்யூனிஸம் என்ற தலைப்பில் லாஹூரின் சன்ரைஸ் என்ற பத்திரிகையில் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். அது இங்கு கூறப்படுகின்றது.

கூறுகின்றார்: இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் கம்யூனிஸம் என்ற தலைப்பில் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிப் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தலைவர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டது எனக்கு பெருமையாக இருக்கிறது. இந்த சொற்பொழிவும் அன்னாரது ஏனைய சொற்பொழிவுகளைப் போன்று நான் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அது அறிவான, சிந்தனையில் பிரகாசத்தை ஏற்படுத்தக்கூடிய, முழுமையாக அறிய வேண்டியவையாக இருந்தது. மிர்ஸா சாஹிப் அவர்கள் போற்றத்தக்க மனிதராக இருக்கின்றார்கள். இந்த தலைப்பின் எல்லா பகுதியிலும் தங்களுக்கு முழுமையான தேர்ச்சி கிடைத்திருக்கின்றது. இதன் காரணமாக உங்களது சிந்தனை கண்ணியமாகப் பார்த்தவாறு நாங்கள் கவனம் செலுத்துவதற்குத் தகுதியானவையாகும்.

வெளி உலகிற்கும் இந்த நூலை வழங்குவது அவசியமாகும். பொதுவாக இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பினை மவ்தூதி சாஹிப் தான் எடுத்துரைத்தார்கள் எனப் பேசப்படுகின்றது. ஆனால் அதற்கு மிகவும் முன்னால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த அறிவுப்பூர்வமான சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார்கள். இது நூல் வடிவிலும் வெளி வந்துள்ளது. தற்போது இது ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு விட்டது. அஹ்மதிகளில் ஆங்கில அறிஞர்களாக இருப்பவர்களும் இதனைப் படிக்க வேண்டும். சுற்றுச்சூழல் குறித்த ஆர்வம் கொண்டவர்களுக்கும் இதனை வழங்க வேண்டும்.

அடுத்து, ***லாலா ராம் சந்த் மச்சிந்தா சாஹிப்*** உடைய தலைமை உரை இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு என்ற தலைப்பில் இருந்தது. அதில் அவர் கூறுகின்றார்: இப்படிப்பட்ட சொற்பொழிவைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் என்னை நற்பேறு பெற்றவனாகக் கருதுகின்றேன். அஹ்மதிய்யத்தின் திட்டங்கள் முன்னேற்றம் அடைவதைக் கண்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. மிகவும் சிறப்பாக முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றது. தற்போது நீங்கள் கேட்ட சொற்பொழிவிலும், மிகவும் விலை உயர்ந்த மற்றும் புத்தம்புதிய விஷயங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். எனக்கு இந்த சொற்பொழிவின் மூலம் அதிக பயன் கிடைத்தது.

மேலும் அவர் கூறுகின்றார்: இஸ்லாம் தனது சட்டத்தில் முஸ்லிம்களை மட்டுமே கவனத்தில் கொள்கிறது. முஸ்லிம் அல்லாதவர்களைக் கவனத்தில் கொள்வதில்லை என நான் தவறாக எண்ணியிருந்தேன். ஆனால் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவருடைய உரையிலிருந்து இஸ்லாம் எல்லா மனிதர்களிடத்தும் சமமாகப் பழகுவதைக் குறித்தே போதனை வழங்குகிறது எனத் தெரிய வந்தது. நான் முஸ்லிம் அல்லாத நண்பர்களிடம், இப்படிப்பட்ட இஸ்லாத்திற்கு கண்ணியம் அளிப்பதற்கு உங்களுக்கு என்ன? எனக் கேட்பேன் என்றார்.

அடுத்து கூறுகின்றார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் இலட்சோப இலட்சம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் தனது விலை உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு சொற்பொழிவாற்றி நம்மை பயனடையச் செய்திருக்கின்றார்கள். ஆக, இது ஒரு பகுதி. அதாவது அவர் வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகளால் நிரப்பப்படுவார் என அறிவிக்கப்பட்ட முன்னறிவிப்புகளின் ஒரு காட்சி ஆகும்.

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மூலம் அறிவு மற்றும் ஞானத்தின் பொக்கிஷத்தை வழங்கி இருக்கின்றான். அதனைப் படிப்பதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! மேலும் அன்னாரது கட்டுரைகளின் பட்டியலில் நான் கூறிய போன்று பல்வேறு வகையான தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளன. அல்லாஹ் அதிலிருந்து பயன் பெறுவதற்கான வாய்ப்பினையும் வழங்குவானாக! மேலும் நாம் நமது அறிவையும், ஞானத்தையும் பெருகச் செய்ய வேண்டும்.

தற்போது நான், தொழுகைகளுக்குப் பிறகு ஒரு ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பேன். இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய ஒரு மகனுடையதாகும். இவர் பீகாரைச் சேர்ந்தவர். ஹஸ்ரத் ஸாரா பேகம் சாஹிபா உடைய வயிற்றிலிருந்து பிறந்தவர் ஆவார்கள். அன்னாரது பெயர் சாஹிப் ஸாதா மிர்ஸா ஹனீஃப் அஹ்மது சாஹிப் ஆகும். இவர் பிப்ரவரி 17ம் தேதி 9.30 மணி அளவில் ரப்வாவிலுள்ள தாஹிர் ஹார்ட் இன்ஸிடியூட்டில் தமது 82வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னார் எனது மாமா ஆவார்கள். 1932 மார்ச் 24ம் தேதி பிறந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது அனைத்து மகன்களையும் போன்று அன்னாரையும் சிறு வயதில் வக்ஃப் செய்திருந்தார்கள். அந்த வகையில் தான் அன்னாரது படிப்பறிவும், ஒழுக்கமும் இருந்தது. அன்னார் காதியானின் மத்ரஸா அஹ்மதிய்யா ஜாமியத்துல் முபஷ்ஷிரீனில் ஆன்மீகக் கல்வி பயின்றார்கள். மெட்ரிக் தனியாரில் படித்து தேர்ச்சி பெற்றார்கள். 1958 –ல் B.A. தேர்ச்சி பெற்றார்கள். லாஹூரின் சட்டக் கல்லூரியில் 1962 –ல் இதற்கான பயிற்சியைச் செய்ய மாட்டேன் என்ற நிபந்தனையில் L.L.B பயின்றார்கள்.

1962 –ல் ஜமாஅத் பணிக்காக வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். 1962 முதல் 1969 வரை சேரலூனில் மெட்ரிக் பள்ளிக்கூடத்தில் பிரின்ஸ்பெல் ஆக தொண்டாற்றினார்கள். அறிவாற்றல் படைத்த மனிதன் ஆவார். 20 வருட முயற்சி மற்றும் ஆராய்ச்சிக்குப் பிறகு திருக்குர்ஆன் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எழுத்துகள், தஃப்ஸீர்களின் கடலை ஒருங்கிணைத்தவாறு விலை உயர்ந்த கூற்றுக்களை அன்னாரது உர்து, ஃபார்ஸி, அரபி மொழியின் கவிதைகள் மற்றும் இல்ஹாம்களை ஒன்றுசேர்த்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய **தஃலீமே ஃபஹ்மே குர்ஆன்** என்ற பெயரில் ஒரு நல்ல பெரிய நூலைத் தொகுத்துள்ளார்கள். அது 2004 –ல் வெளி வந்தது. இதனைப் போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அரபி, ஃபார்ஸி, உருது அரபிகளுடன் உள்ள கவிதைகளை மற்றொரு நூலில், **அதபுல் மஸீஹ்** என்ற பெயரில் வெளி வந்துள்ளது. இதுவும் ஒரு சிறந்த கவிதை தொகுப்பாகும். இவர்களது திருமணம் 1959 –ல் கண்ணியத்திற்குரிய ஸைய்யத் ஸைனுல்லாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிபுடைய இவர் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய மாமா ஆவார்கள். அவர்களது மகன் தாஹிரா பேகம் சாஹிபாவுடன் நடைபெற்றது. இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளன. முதலாவது ஸல்மான் அஹ்மது. இவர் அமெரிக்காவில் உள்ளார். அதன் பின்னர் மூன்று மகள்கள் உள்ளனர்.

டாக்டர் காலித் தஸ்லீம் அஹ்மது சாஹிப் உடைய மனைவி அமத்துல் மூஃமின் ஹினா சாஹிபா, மிர்ஸா ஹஸன் அஹ்மது உடைய மனைவி மீனா முபாரக்கா சாஹிபா, பரோக் அஹ்மது கான் உடைய மனைவி அப்துஸ் ஸமீயி சாஹிபா ஆவார்கள். இவரது மனைவி ரப்வாவில் இருக்கிறார்கள்.

செராலீயூனில் இருந்த காலம் வரை போ நகரத்தில் ஜமாஅத் பள்ளிக் கூடத்தில் முதன் முதலாக Science Block தொடங்கப்பட்டது. அன்னாரது மனைவி கூறுகின்றார்கள். மிகவும் கவனத்துடன் நாள் முழுவதும் நின்று கொண்டே இந்த Block –ஐ கட்டி முடிக்கச் செய்தார்கள். கமர் ஸல்மான் சாஹிப் செராலியூனுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்கள். அவரை மக்கள் தற்போது வரை அன்னாரை நினைவு கூறுவதாகக் கூறியுள்ளார். அனாதைகளை வளர்ப்பது குறித்து கவனம் செலுத்தி வந்தார்கள். மறைவாக அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

தனது நண்பர்களை அதிகமாக கவனத்தில் வைத்து வந்தார்கள். அதிகமாக நட்புறவை வளர்த்து வந்தார்கள். தனது ஒரு நெருங்கிய நண்பர் ஒருவருடைய மரணத்திற்குப் பிறகு அவரது சின்னஞ்சிறு பிள்ளைகளைக் கவனித்து வந்தார். அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். இவர் நட்பின் உறவை பேணியுள்ளார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய பிள்ளைகளில் ஃபார்ஸி மொழியில் அதிகளவு தேர்ச்சி பெற்றவர் இவர்கள் தான். இவர்களுக்கு ஃபார்ஸி நன்றாகத் தெரியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களை ஆழ்ந்து படித்திருந்தார்கள். அதன் மூலமாகத்தான் அன்னார் ஃபஹ்மே தஃலீமுல் குர்ஆன் என்ற நூலை எழுதியுள்ளார்கள். எப்போது வரை நன்றாக ஆழ்ந்து படிக்கவில்லையோ அப்போது வரை அந்நூலை எழுத முடியாது.

அவர்களது மனைவி கூறுகின்றார்கள்: இது அவர் தாமே கூறியதாகும். அதாவது மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில நூல்கள் அல்லது எல்லா நூல்களையும் அவர் 20, 25 தடவை படித்திருந்தார்கள். காதியானுடன் அசாதாரணமான அன்பு இருந்தது. இரண்டு மூன்று வருடங்களாக அன்னாரது உடல்நிலை மிகவும் மோசமானதாக இருந்தது. இருந்தபோதிலும், கடந்த இரண்டு வருடமும், காதியான் ஜல்ஸாவிற்குச் சென்று வந்துள்ளார்கள். துஆவிலும் அன்னாருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது.

அன்னாரது மகள் கூறுகின்றார்கள்: அதாவது அவர்கள் ஒரு சஹாபாவைப் பற்றிய கதையைக் கூறினார்கள். அவர்கள் அவரை கனவில் பார்க்கிறார்கள். அதில் அவர்களது தர்ஜா உயர்ந்து கொண்டே செல்கின்றது. அப்போது அவர் நான் இப்படிப்பட்ட அமல்களைச் செய்யவில்லையே எனக் கருதுகின்றார். அப்போது அவருக்கு நீர் விட்டு வந்த நல்ல பிள்ளைகள் எப்போதும் உமக்காக துஆ செய்கின்றன. அதன் காரணமாக ஒவ்வொரு நாளும் உமது தர்ஜாவில் உயர்வு ஏற்படுகிறது எனக் கூறப்பட்டது.

அப்போது அவர்கள் தமது பிள்ளைகளிடம் எனக்காகவும் நீங்கள் துஆ செய்து வாருங்கள் என அறிவுரை வழங்கினார்கள். அல்லாஹ் இவர்களது பிள்ளைகளையும் நன்மையில் நிலைபெறச் செய்வானாக! ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது பிள்ளைகளிடம், தனது ஜமாஅத்திடம் வைத்த எதிர்பார்ப்பிற்கேற்ப செயல்படுபர்களாக ஆக்குவானாக! மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய இந்த துஆவிற்கு இவர்களது பிள்ளைகளையும், ஜமாஅத்தார்களையும் உரிமையாளர்களாக ஆக்குவானாக! அதாவது,

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், பிள்ளைகள் தொடர்பாக கூறினார்கள்:***

அல்லாஹ்வே! இவர்களது பிள்ளைகளும், அவர்களது பிள்ளைகளும் உலகம் நிலைபெற்றிருக்கும் வரை உனது அமானத் ஆவார்கள். அதில் ஷய்த்தான் எந்த விதமான தடங்களையும் செய்து விடக் கூடாது. அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் கண்ணியத்திற்குரிய ஹனீஃப் அஹ்மது சாஹிபுடன் கருணையுடனும், மன்னிப்புடன் பரிமாறுவானாக! அன்னாரது தர்ஜாவை உயர்த்துவானாக! இவர்களது பிள்ளைகளையும் அவர்கள் எந்த இரத்தத்துடன் தன்னை தொடர்புபடுத்த கூடியவர்களாக இருக்கின்றார்களோ அதன் உரிமையை நிறைவேற்றுபவர்களாகட்டுமாக!

அன்னாருக்கு என்னுடன் மிகச் சிறந்த முறையில் தொடர்பு இருந்தது. கிலாஃபத்திற்கு முன்பும் இருந்தது. கிலாஃபத்திற்குப் பிறகு அந்த அன்பு மேலும் அதிகமானது. ஆனால் அதில் தன்னடக்கம் பரிசுத்தம், விசுவாசம் போன்றவை எல்லை கடந்து வெளிப்பட்டது. அல்லாஹ் அன்னாரது தர்ஜாவை உயர்த்திக் கொண்டே செல்வானாக! அவர்களது பிள்ளைகளுக்கும் கிலாஃபத்துடன் ஒரு சிறந்த தொடர்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **21.02.2014**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456